**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.596** **நாள்: 21.10.2026**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு திரு.வி.க.நகர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (21.10.2026) மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதைத் தொடர்ந்து, திரு.வி.க.நகர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு மேயர் அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-71க்குட்பட்ட பெரம்பூர் சுரங்கப்பாதையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் அகற்றும் நடவடிக்கைகளையும், ஸ்டீபன்சன் சாலை செங்கை சிவம் பாலம் பகுதியில், ஓட்டேரி நல்லா கால்வாயில் தண்ணீர் தங்குதடையின்றி செல்வதையும், வார்டு-72க்குட்பட்ட காந்தி கால்வாயில் நீர் சீராகச் செல்வதையும், வார்டு-77க்குட்பட்ட பவுடர் மில்ஸ் சாலை பேசின் பாலம் பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, மாண்புமிகு மேயர் அவர்கள் பேசின் பாலம் பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடித்திடவும், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் அனைத்து கால்வாய்களிலும் நீர் தங்குதடையின்றி சீராகச் செல்வதை உறுதி செய்திடும் வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறு      னார்.

தொடர்ச்சியாக, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, மண்டல அலுவலர் திரு.சதீஷ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**